**Tamilmanam International Research Journal of Tamil Studies**
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (Oct 2026), pp. 276–282
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# கவிமணியின் குழந்தைச்செல்வம் கவிதையில் உயிரினங்கள்

**குருவம்மாள் மா[1,*], பத்ம பிரியா மா[2]**

[1] நேரமுனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்னம் மகளிர் கல்லூரி,சிவகாசி., *India*

[2] உதவிப்பேராசிரியர்,முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்னம் மகளிர் கல்லூரி,சிவகாசி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: குருவம்மாள் மா — priyaarul065@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | 4 October 2026 | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | TAJP-2026-00048 |

## ஆய்வுச்சுருக்கம்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் 'குழந்தைச்செல்வம்' கவிதைத் தொகுப்பில் இயற்கை மற்றும் விலங்கினங்கள் மனிதர்களைப் போலப் பேசும் (Personification) மற்றும் இயங்கும் தன்மையுடன் மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளைக் கவரும் வகையில் அவர் கையாண்டுள்ள உயிரினங்களின் சிறப்புகள் பின்வரும் தன்மையில் அமைகின்றன.அவையாவன, பசுவும் கன்றும் என்ற இயற்கை வாழ்வின் உன்னதத்தை உணர்த்துகின்றன.அணில் குட்டியில் அணிலின் ஓட்டமும், அதன் வால் அழகும், அது கொய்யாப்பழத்தைக் கொறித்துத் தின்னும் பாங்கும் குழந்தைகளிடம் நகைச்சுவையையும் இயற்கை ஆர்வத்தையும் தூண்டும் வகையில் பாடப்பட்டுள்ளது.நாய்க்குட்டி பாடலில் வீட்டின் காவல் விலங்கான நாயின் நன்றியுணர்வையும், குழந்தைகளோடு அது விளையாடும் பாசப் பிணைப்பையும் எளிய அறநெறிகளோடு கவிமணி விவரித்துள்ளார்.பறவைகளின் உரையாடல் பகுதியில் காகம், குருவி போன்ற எளிய பறவைகள் தங்களுக்குள் பேசிக் கொள்வது போன்றும், குழந்தைகளுக்கு அறிவுரை கூறுவது போன்றும் அமைந்த பாடல்கள், பறவைகள் மீதான அன்பை வளர்க்கின்றன.கவிமணியின் இத்தகைய தனித்துவமான எழுத்து நடை, குழந்தைப் பருவத்திலேயே விலங்குகள் மற்றும் இயற்கையின் மீதான பரிவையும், அறநெறி சார்ந்த சிந்தனைகளையும் ஆழமாக விதைக்கிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** குழந்தைச்செல்வம்; குழந்தைஇலக்கியம்; மனிதர்களைப் போலப் பேசுதல்; இயற்கை; விலங்கு; பறவை.

## Abstract

In Kavimani Desika Vinayagam Pillai’s poetry collection Kuzhandaichelvam, nature and animals are portrayed vividly through personification, often speaking and behaving like human beings. The distinctive representation of animals in his poems is designed to attract children and cultivate their interest in the natural world. The poems Cow and Calf (Pasuvum Kanrum) convey

the nobility and harmony of rural life and the bond between humans and animals. In The Little Squirrel (Anil Kutti), the squirrel's playful movements, beautiful tail, and manner of nibbling guava are depicted humorously, stimulating children's curiosity and appreciation of nature. In The Puppy (Naikkutti), Kavimani portrays the dog's loyalty and its affectionate relationship with children while conveying simple moral values. In the section The Conversation of Birds, familiar birds such as the crow and sparrow are presented as engaging in conversations with one another and offering advice to children, thereby fostering love and compassion towards birds. Through this distinctive literary style, Kavimani effectively instils in children, from an early age, a sense of compassion towards animals and nature, along with moral and ethical values.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** மா, கு., & மா, ப. பி. (2026). கவிமணியின் குழந்தைச்செல்வம் கவிதையில் உயிரினங்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01). https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8724

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டுக் குழந்தைக்கவிஞர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆவார். கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில் ஜூலை 27, 1876 அன்று பிறந்தார்.பெற்றோர்கள் சிவதாணுப்பிள்ளை,ஆதிலட்சுமிஅம்மையார். அவரின் திருமணவாழ்க்கையில் துணையாக நின்றவர் உமையம்மை ஆவார். அன்னாரின் மறைவு செப்டம்பர் 26, 1954ஆகும்.சென்னை தமிழ் சங்கம் இவருக்கு 1940-ஆம் ஆண்டு **'கவிமணி'** எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. எட்வின் ஆர்னால்டின் 'The Light of Asia' நூலின் தழுவலே **ஆசிய ஜோதி ஆகும்.உமர் கய்யாம் பாடல்கள்:** பாரசீகக் கவிஞரின் பாடல்களின் தமிழாக்கம் செய்த பெருமையாளர். பள்ளிக் குழந்தைகளுக்கான பாடல்களை அறங்கள் சார்ந்தும் நகைச்சுவை உணர்வுடனும் எழுதி உள்ளார். இவர் பாடல்களில் இயற்கையும் இயற்கை வாழ் உயிரினங்களும் பேசும் தன்மை உடையன. இக்கட்டுரை கவிமணியின் . குழந்தைச்செல்வம் கவிதையில் உயிரினங்கள் குறித்து ஆய்கின்றது.

## காகம்

**கவிமணியின் கவிதையில் காகம் – சிறுவர்களின் உரையாடல் இடம்பெற்றுள்ளது. கண்ணுக்கு மை கொண்டு வரச்சொல்லி அழைப்பதாக அமைந்துள்ளது.மேலும் காகத்தின் கருப்பு நிறத்தைக் குறித்தே கருப்பு மை கண்ணுக்கு குழந்தை கேட்கும் புத்திசாலித்தனம் கூறப்படுவதுடன் பறவையின் பறக்கும் செயலும் கூறப்பட்டுள்ளது.**

காக்காய்! காக்காய்! பறந்து வா ;
கண்ணுக்கு மை கொண்டு வா. **(குழந்தைச்செல்வம்,ப.9)**

மனிதர்களைப் போல காகத்துடன் பேசும் (Personification) தன்மை மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

## கோழி

"**கோழி** (*chicken*) என்பது காடுகளிலும், மனிதர்களால் வீடுகளிலும் அதற்கான கோழிப் பண்ணைகளிலும் வளர்க்கப்படும் ஒரு அனைத்துண்ணிப் பறவையாகும். இதில் பெண்ணினம் **பெடை** எனவும், ஆணினம் **சேவல்** எனவும் அழைக்கப்படுகின்றது. 2003-ல், உலகில் இவற்றின் எண்ணிக்கை 24 பில்லியன் என்று கணக்கிடப்பட்டுள்ளது."[1]கோழி பற்றிய அறிதல் குழந்தைகளுக்கு இருப்பதால் ஆண் இனம் சேவல் என்றும் பெண் இனம் பெட்டைக்கோழி என்றும்

பிரித்தறிந்து பாடல் பாடி உள்ளதாக அமைத்துள்ளார் கவிஞர்.

கோழீ ! கோழீ! வா வா;
 கொக்கோ கோ என்று வா ;
கோழீ ! ஓடி வா வா ;
 கொண்டைப் பூவைக் காட்டு வா.
குத்திச் சண்டை செய்யவோ?
 குப்பை கிண்டி மேயவோ?
கத்திபோல் உன் கால்விரல்
 கடவுள் தந்து விட்டனர்!
காலை கூவி எங்களைக்
 கட்டில் விட்டெழுப்புவாய்;
வேலை செய்ய ஏவுவாய்;
 வெற்றி கொண்ட கோழியே! **(குழந்தைச்செல்வம்,ப.10)**

சேவல் என்றாலே அதிகாலை அனைவரையும் துயில் எழுப்புவது முதல் மனிதர்களுடன் அவர்கள் வாழும் குடியிருப்பில் ஒன்றாகச் சுற்றித்திரிதல் வரை கூறப்பட்டுள்ளது. சேவலின் சண்டைசெய்யும் வீரம்,தூக்கத்தில் இருந்து எழுப்பும் வேலை பற்றி பாராட்டு அமைந்துள்ளது. பெட்டைக்கோழி என்றாலே முட்டையிடும்,கூட்டில் அடைகாக்கும்,பிள்ளைகளுக்கு கொத்தித்தின்ன பழக்கப்படுத்தும்,குழந்தைகளுக்கு துன்பம் என்றால் காப்பாற்றும் என்று சிறப்பிடம் தந்து குழந்தைகள் பாராட்டுவதாக பாடலைப் பாடியுள்ளார் கவிமணி.

கோழீ ! கோழீ ! வா வா:
 கூரை விட்டு இறங்கி வா;
கோழீ! முட்டை இட வா:
 கூட்டில் அடை காக்க வா.
பெட்டைக் கோழீ! வா வா;
 பிள்ளைகளைக் கூட்டி வா!
குட்டை நெல்லைக் கொட்டினேன்;
 கொத்திக் கொத்தித் தின்ன வா.
வஞ்சமாய்ப் பருந்ததோ
 வானில் வட்டம் போடுது;
குஞ்சணைத்துக் காப்பாயோ?
 கூட்டில் கொண்டு சேர்ப்பாயோ? **(குழந்தைச்செல்வம்,ப.11)**

**சேவல் –கோழி என்று பறவையின் இருவேறுபட்ட பணிகளை குழந்தைகள் சிறுவயதில் நுண்ணறிவால் பிரித்தறிந்துள்ளதாக பாடல் அமைந்துள்ளது.**

**நாய்**

நாய்கள் காட்டில் வாழும் இயல்பு கொண்டிருந்தாலும் மனிதர்களை சார்ந்தும் வாழ்கின்றன. “நாய்கள் மனிதனின் நண்பன் என்று பரவலாக கருதப்படுகிறது. நாய்கள் மனிதர்களுக்குக் காவல் நாய்களாகவும், ஆடுமாடுகளை மேய்க்கப் பயன்படும் மேய்ப்பு நாய்களாகவும், வேட்டையாட உதவும் வேட்டை நாய்களாகவும், பனிப்பகுதிகளிலே சறுக்குப்பொதிகளை இழுத்துச் செல்வது போன்று பணிபுரியும் நாய்களாகவும் (இழுநாய்), கண்பார்வை இழந்தவர்களுக்குத் துணையாக வழிகாட்டு நாய்களாகவும், பல்வேறு வழிகளிலே துணை நிற்கின்றன.”[2]

வீட்டு வாசல் காப்பவன்,

வேட்டை யாட வல்லவன்,
ஆட்டுக் கிடைப் பாண்டியன்,
அன்பு மிக்க தோழன்.
உண்ட சோற்றை எண்ணி
உயிரும் விடத் துணிபவன்.
மண்டலத்தில் நாய்போல்
வாய்த்த துணை உண்டோ? **(குழந்தைச்செல்வம்,ப.11)**

உலகத்தில் நாய் போன்ற துணைஇல்லை என்று நாயுடன் மனிதனுக்கு உள்ள நல்லுறவு குழந்தையால் பாராட்டப்பட்டுள்ளது.

**கிளி**

"அழகான பறவை வகைகளில் கிளிகளும் ஒன்று. உலகில் 350 க்கும் மேற்பட்ட கிளி இனங்கள் உள்ளன. இருபது வகையான கிளிகள் செல்லப் பிராணிகளாக வீட்டில் வளர்க்கப்படுகின்றன. இயல்பிலேயே கிளிகள் புத்திசாலித்தனமான பறவைகள். மக்களுடன் அன்போடு பழகக் கூடியவை. தங்களை வளர்க்கும் மக்களிடம் பாசமாகவும் அரவணைப்புடனும் இருக்கும்."[3] கிளியுடன் உரையாடும் பாங்கு திருட்டுப் பொருளைக் கண்டுபிடித்துத் தரக்கோரி அமைந்துள்ளது.

பச்சைக் கிளியே! வா வா ;
பாலும் சோறும் உண்ணவா ;
..................
கவலை எல்லாம் நீங்கவே,
களிப் பெழுந்து பொங்கவே,
பையப் பையப் பறந்து வா,
பாடிப் பாடிக் களித்து வா;
கையில் வந்திருக்க வா.
கனி அருந்த ஓடிவா.
பவழக் காரத் தெருவிலே
பவழங் காண வில்லையாம்;
எவர் எடுத்துச் சென்றனர்?
எனக் கறிந்து சொல்வையோ?5
அரசர் மார்பில் ஆரத்தை
ஆரோ கொண்டு போனாராம்;
திருடிச் சென்றார் எவரம்மா?
தெரியு மானால், சொல்லம்மா! **(குழந்தைச்செல்வம்,பக்.11-12)**

**பால் தருவேன், கனி தருவேன் என்று கிளிக்கு உணவளிக்கும் குழந்தையின் நற்பண்பு புலனாகின்றது. குழந்தைஇலக்கியங்கள் குழந்தைகளுக்கு நற்பண்பு புகட்டவே பாடப்பட்டுள்ளன என அறியலாம்.**

**பசு**

"மாடு என்பது பொதுவாக பசு மாடு, எருமை மாடு என இரண்டையும் குறிக்க தமிழில் பயன்படுத்தப்படும் சொற்களாகும். பசு என்பது மாட்டில் பெண்ணினத்தையும் எருது என்பது ஆணினத்தையும் குறிக்கும். ஆ, பசு, ஆன், கோ, குடஞ்சுட்டு, சுரபி, தேனு, கபிலை, சேதா, குரம், கோமளம் போன்றவை தமிழில் பசுவைக் குறிக்க பயன்படுத்தப்படும் சொற்களாக திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது."4 பசுவுடன் குழந்தை உரையாடி அறியும் செய்திகள் வாயிலாக பசுவின் இனிமையான

தன்மைகள் புலனாகின்றது.பால் தர என்ன செய்கிறாய்?எவ்வாறு வளர்க்கிறாய்? எவ்வாறு உன் கன்றுகளின் நோய் தீர்க்கிறாய்? என்று அடுக்கடுக்காய் வினாக்களை எழுப்பி விடை கேட்கும் ஆர்வம் இப்பாடலில் உள்ளது.

பச்சைப்புல்லைத் தின்று, வெள்ளைப்
    பால் தர, நீ என்ன
பக்குவஞ் செய்வாய்? அதனைப்
    பகருவையோ? பசுவே!
உச்சியுடல் நக்கி, ஈன்ற
    உடன், உனது கன்றை
உயிரெழுப்பும் மாயம் எதோ?
    உரைத்திடுவாய், பசுவே!
வாய்க்கினிய பால் தருவாய்;
    வயற்குரமும் தருவாய்;
வண்டிகட்டக் காளையும் நீ
    வளர்த்தளிப்பாய்,பசுவே!
தாயில்லாப் பிள்ளைகட்குத்
    தாய் ஆவாய்; நோயால்
தளர்பவர்க்கு மருத்துவச்சி
    தானாவாய்,பசுவே! **(குழந்தைச்செல்வம்,ப.15)**

**பின்வரும் பாடலில் பசு – கன்று இரண்டின் உன்னதமான தாய்-சேய் உறவுநிலை குழந்தையால் வியந்து பார்க்கப்பட்டு மகிழப்பட்டுள்ளது.**

தோட்டத்தில் மேயுது,
    வெள்ளைப் பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது,
    கன்றுக் குட்டி.
அம்மா என்குது,
    வெள்ளைப் பசு—உடன்
அண்டையில் ஓடுது,
    கன்றுக் குட்டி.
நாவால் நக்குது,
    வெள்ளைப் பசு—பாலை
நன்றாய்க் குடிக்குது,
    கன்றுக் குட்டி.

முத்தம் கொடுக்குது,
    வெள்ளைப் பசு—மடி
முட்டிக் குடிக்குது,
    கன்றுக் குட்டி. **(குழந்தைச்செல்வம்,ப.17)**

பசுவின் வெள்ளை நிறம், கன்றுக்குட்டி பால்குடிக்கும் முரட்டுத்தனம் என குழந்தை பாடுவதாக அமைத்துள்ளார்.

**அணில்**

அணில் மரங்களிலும், வீடுகளில் மறைவான இடங்களில் பறவையைப்போல் கூடு கட்டியும் வசிக்கும். தேங்காய் நார், பஞ்சு முதலியவைகளைக் கொண்டு

கூடுகட்டும். குழந்தை அணிலுடன் ஒடி வா என்று விளையாடுகின்றது. கொய்யா பழங்களைப் பறித்துத்தர கட்டளையிடுகின்றது.மேலும், அணிலுக்குப் பங்கு வைத்துத் தர நினைப்பது பகிர்ந்துண்ணும் பண்பாட்டுணர்வை குழந்தைப்பருவத்தில் விதைப்பதாக அமைந்துள்ளது.மேலும்,குழந்தைகள் உயிரினத்துடன் கருணையுடன் நடந்து கொள்வது புலனாகின்றத.

அணிலே அணிலே ஓடி வா!
அழகு அணிலே ஓடி வா!

கொய்யா மரம் ஏறி வா!
குண்டு பழம் கொண்டு வா!

பாதி பழம் உன்னிடம்
மீதி பழம் என்னிடம்

கூடிக் கூடி இருவரும்
கொறித்து கொறித்து தின்னலாம்! **(குழந்தைச்செல்வம்,ப. 22)**

### முடிவுரை

குழந்தைகளுக்கானப் பாடல்களில் கவிமணி நற்பண்பு புகட்டுமாறும், பகிர்ந்துண்ணும் பண்பு போதித்தும்,உதவும் குணம் கூறியும்,விளையாடும் குணம் காட்டியும், உயிரினங்களை சமமாக நேசிக்கும் குணத்தையும் படைத்துக் காட்டியுள்ளார்.மேலும்"தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு" என்ற பாடலில், தாய்ப் பசுவின் அன்பையும், அதனருகே துள்ளிக் குதிக்கும் கன்றுக் குட்டியின் மழலைத் தன்மையையும் எளிய சொற்களில் விளக்கியுள்ளார். பசு கன்றைத் நக்குவதும், கன்று கத்துவதும் இயற்கை வாழ்வின் உன்னதத்தை உணர்த்துகின்றன.**அணில் குட்டிப்பாடலில்** அணிலின் ஓட்டமும், அதன் வால் அழகும், அது கொய்யாப்பழத்தைக் கொறித்துத் தின்னும் பாங்கும் குழந்தைகளிடம் நகைச்சுவையையும் இயற்கை ஆர்வத்தையும் தூண்டும் வகையில் பாடப்பட்டுள்ளது. வீட்டின் காவல் விலங்கான நாயின் நன்றியுணர்வையும், குழந்தைகளோடு அது விளையாடும் பாசப் பிணைப்பையும் எளிய அறநெறிகளோடு கவிமணி விவரித்துள்ளார்.**பேசும் தன்மை (Personification) வாயிலாக** கவிமணி விலங்குகளை வெறும் அஃறிணையாகப் பார்க்காமல், அவை தாயன்பு காட்டுவதாகவும், மனிதர்களோடு உரையாடுவதாகவும் சித்தரித்து கட்டுரையின் மையக் கருத்தை (உயிரினங்கள் பேசும் தன்மை) பலப்படுத்துகிறார். நன்றியுணர்வு (நாய்), தாய்ப்பாசம் (பசு), பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் போன்ற உயரிய அறங்களை இப்பாடல்கள் மூலம் குழந்தைகளுக்குக் கற்பிக்கிறார்.கவிமணியின் இத்தகைய தனித்துவமான எழுத்து நடை, குழந்தைப் பருவத்திலேயே விலங்குகள் மற்றும் இயற்கையின் மீதான பரிவையும், அறநெறி சார்ந்த சிந்தனைகளையும் ஆழமாக விதைக்கிறது.

### அடிக்குறிப்புகள்

1. *Firefly Encyclopedia of Birds.*
2. **https://ta.wikipedia.org/நாய்**

## 3. கிளிகளின் ரகசிய உலகம்: வித்தியாசமான கிளி

**வகைகள்!, https://kalkionline.com/lifestyle/environment/the-secret-world-of-parrots-different-types-of-parrots**

4. முனைவர் ஆ. சுலோச்சனா, ஆரோக்கியம் தரும் ஆவிறைச்சி, கட்டுரை, விடுதலை ஞாயிறு மலர், பக்கம் 14 29. சனவரி. 2022.

**துணைநின்ற நூல்**

1. **கவிமணிசி.தேசிகவிநாயகம்பிள்ளை,குழந்தைச்செல்வம்,பாரிநிலையம் 59.பிராட்வே. சென்னை 1.ஏப்ரல்1954.**

© 2026 குருவம்மாள் மா, பத்ம பிரியா மா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..